# தமிழ் மொழி மரபில் சைவ சித்தாந்தம்

கலாநிதிநா. வாமன்

*தலைவர்,*

*இந்துநாகரிகத்துறை,*

*கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.*

சுருக்கம்

இந்திய தத்துவச்சிந்தனை மரபில் இன்றும் நிலைத்து வாழும் ஒரு சமயதத்துவமாக விளங்கு வது சைவசித்தாந்தமாகும். சிவனை முழுமுதல் இறைவனாகக் கொண்டமைந்த சைவ சித்தாந்தமானது தத்துவரீதியிலும், சமய நிலையிலும் செழுமைக்குரிய வகையில் அமைந்துள்ளது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் உண்மை என்பதே அத்தத்துவத்தின் அடிப்படைக் கொள்கையாகும். சைவ சித்தாந்தக் கருத்துக்களின் தோற்றம் தொடர்பாக பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. தமிழரின் தொன்மை இலக்கியங்களாக எடுத்தாளப்படும் சங்க இலக்கியங்கள், திருக்குறள், திருமுறைகள் போன்றவற்றில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ள போதும், முறைப்படுத்தப் பட்ட ஒரு தத்துவ நெறியாக தமிழரிடையே தமிழ் மொழியில் 13ஆம், 14 ஆம் நூற்றாண்டளவிலேயே வளர்ச்சியடைந்த தென்பதைப் பலரும் வலியுறுத்தியுள்ளனர். அதாவது சைவ சித்தாந்தத்தின் மூலநூல்களாகிய மெய்கண்டசாஸ்திர நூல்களின் தோற்றத்துடன் சைவ சித்தாந்தம் தமிழர் தத்துவமாக உருவாக்கம் பெற்றதை இந்திய தத்துவஞான வரலாறு எடுத்துக்காட்டும்.

முக்கிய வார்த்தைகள்: சைவசித்தாந்தம், திருமுறைகள், மெய்கண்டசாத்திரங்கள், ஆதீனங்கள்

## அறிமுகம்

சைவ சித்தாந்தம் என்பது சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடும் மக்களின் பிரதானதத்துவக் கொள்கையாக இன்றுவரை காணப்படுகின்றது. சிவனை முழுமுதற் தெய்வமாகக் கொண்ட சைவ சமயத்திற்குள் வேறுபட்ட தத்துவமரபுகள் ஆரம் பகாலம் முதல் நிலவிவந்தாலும் சைவ சித்தாந்தக் கொள்கைக் குத்தனித்துவமான பண்பாட்டு வரலாறும், வாழ்வியல் முறைகளும் காணப்படுகின்றன. குறிப்பாக வேதாகமத்துடன் சைவ சித்தாந்தம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. வேதத்தைப் பொதுவாகவும் ஆகமத்தைச் சிறப்பாகவும் தனது பிரமாண நூல்களாகக் கொண்டுள்ளது.

"வேத மோடாகம மெய்யாம் இறைவன் நூல்

ஓதும் பொதுவும் சிறப்பும்…." (51)



© 2024, IRJTSR 

என்ற திருமந்திரப் பாடலினால் இதனை அறிந்து கொள்ளலாம். இந்திய மெய்யியல்கள் தனியே அறிவுக் கொள்கையாகவோ, ஒழுக்கக் கொள்கையாகவோ அல்லது இவை இரண்டையும் உள்ளடக்கியனவாகவோ நிற்கின்றன. சைவ சித்தாந்த மெய்யியலானது ஒருவனை வாழ்வியலினூடு ஆன்மீகத்திற்கு இட்டுச் செல்கின்றது என்பர். அந்தவகையில் அது தன்னை ஒரு சமயமாகவும் மெய்யியலாகவும் நிலை நிறுத்திக் கொள்கின்றது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தர்க்க அடிப்படையில் வெளிப்படுத்தப் படுதலைக் காணலாம். ஜோன்பீற் என்பவர், "மெய் கண்டார் நிபுணத்துவம் இரு அடிப்படையிலானது. அவை முறையே சுருக்கமாகச் சொல்லுதல், தர்க்க அடிப்படையில் சொல்லுதல் என்பன" எனக்கூறியுள்ளமை கவனத்திற்குரியதாகும். (துழாn ர். Pநைவஇ 1952:02)

சைவ சித்தாந்திகள் உண்மைப் பொருள்களாக பதி, பசு, பாசம் என்பவற்றை ஏற்று நிற்பர். அநாதியான பசு உலகில் மீண்டும் மீண்டும் பிறந்து உழல் கின்றமைக்குக் காரணமாவது பாசமாகும். அப்பாசம் அநாதியாகவே பசுவைப் பீடித்திருக்கின்றது. பாசத்தினின்றும் நீங்கிப்பதியை அடைவதே பசுவின் இலட்சியம். இதுவே முக்திஎன்பர். நித்தியமானதாயும், யாவற்றையும் தன்னுள் அடக்கவல்லதாயும், தன்னிலும்; மேம்பட்டது ஒன்றும் இல்லாததாய் உள்ள ஒரே பொருளும், எவ்விதகளங்கமு மில்லாததாயும் உள்ள ஒரே பொருள் பதி என்பதனால் இப்பொருளைச் சைவ சித்தாந்திகள் முதற்பொருளாகக் கொண்டுள்ளனர். பசுக்கள் அநேகமானதாயும் நித்தியமாயும் இருந்தபோதிலும் அனாதியாகவே மலச்சேர்க்கை உடையதாயும், சிற்றறிவுப்பொருள்களாயும் பலகுறைபாடுகளுக்கு உட்பட்டிருப்பதனால் பசுவை இரண்டாம் நிலைப்பொருளாக சைவ சித்தாந்தம் கொண்டுள்ளது. சடப்பொருளாகிய பாசம் நித்தியமானது எனினும் மூன்றாவதாகவே பேசப்படுகின்றது. இம்முப்பொருள் பகுப்புக்குள் மற்றெல்லாப் பொருட்களும் அடங்கும் என்பதே சித்தாந்திகள் முடிபாகும். மனிதவாழ்வின் நோக்கினையும், வாழ்வில் பெறவல்லதான உயர்நிலையையும் எடுத்துக்காட்டுவதுடன் அவற்றைப்பெறுவதில் உள்ள இடர்பாடுகளையும் சுட்டி, நிலையான பேரின்பப் பெருவாழ்வுக்கான வழிகாட்டும் நெறியாக சைவ சித்தாந்தம் விளங்குகின்றது.

சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் ஏனைய சமயத்தைச் சார்ந்தவர்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் அமைவு பெற்றுள்ளன. ஜி. யு. போப்ஐயர் "சைவ சித்தாந்தக் கொள்கையானது தமிழரது பேரறிவின்பயன்" (குன்றக்குடி அடிகளார், 1965: 126) எனக்குறிப் பிடுகின்றார். கௌடி என்ற பாதிரியார், "சைவ சித்தாந்தக் கொள்கையானது தொன்மை நலம் பல அமையப் பெற்றதாகும், இந்திய நாட்டில் வழங்கும் சமயக்கருத்துக்களில் பழமையானவை இச்சமயத்திற்கே உரிமையுடையனவாகும். இச்சித்தாந்தச் சிவநெறியே தமிழர்களின் பண்டைய சமயநெறியாகும்" (மேலது:126) எனக்கூறுவது சைவ சித்தாந்தத்தின் பழமையையும், சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றது.

சைவ சித்தாந்தக் கருத்துக்களின் தோற்றம் தொடர்பாக பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. தமிழரின் தொன்மை இலக்கியங்களாக எடுத்தாளப்படும் சங்க இலக்கியங்கள், திருக்குறள், திருமுறைகள் போன்ற வற்றில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ள போதும், முறைப்படுத்தப் பட்ட ஒருதத்துவ நெறியாக தமிழரிடையே தமிழ் மொழியில் 13ஆம், 14 ஆம் நூற்றாண்டளவிலேயே வளர்ச்சியடைந்த தென்பதைப் பலரும் வலியுறுத்தியுள்ளனர். அதாவது சைவ சித்தாந்தத்தின் மூலநூல்களாகிய மெய்கண்ட சாஸ்திரநூல்களின் தோற்றத்துடன் சைவ சித்தாந்தம் தமிழர் தத்துவமாக உருவாக்கம் பெற்றதை இந்திய தத்துவஞான வரலாறு எடுத்துக்காட்டும். சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள் வட மொழி மரபிலும் தமிழ் மொழி மரபிலும் இடம் பெற்றாலும் தமிழ் மொழிமரபில் அதன் கருத்துப் பரவல் அதிகமாகும். பழந்தமிழ் நூல்களின் தோற்றத்துடன் ஆரம்பித்து, திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், ஆதீனங்களின் பணிகள் என்ற அடிப்படையில் தமிழ்மொழி மரபில் சைவ சித்தாந்தம் வளர்ச்சியடைந்த வாற்றை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

பழந்தமிழ் நூல்கள்

தமிழர் வாழ்வில் சைவமும், தமிழும் இணைந்தே வளர்ந்து வந்துள்ளன என்பது வரலாற்று உண்மை. பழந்தமிழ் நூல்களில் ‘சிவன்’ என்ற சொல் எடுத்தாளப் படவில்லை. எனினும் சிவனின் பண்புப் பெயர்கள் பல காணப்படுகின்றன. ‘ஆலமர்ச் செல்வன்’ , (சிறுபாணாற்றுப்படை: 96-7) ‘முக்கட்செல்வன்’ , (புறநானூறு 6: 17-18) ‘நீலமேனிவாலிழைபாகத்தொருவன்’ , (அகநானூறு, 181:16-17) ‘திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள்’ (பரிபாடல், 95) ‘இமையா முக்கண் மூவெயில் முருக்கிய முரன்மிகு செல்வன்’ (திருமுருகாற்றுப்படை: 153-155) ‘பிறவாயாக்கைப்பெரியோன்’ , (சிலப்பதிகாரம் 5:169 – 172) எனப் பல தொடர்களால் சிவன் கூறப்படுகின்றான்.

தமிழில் மணிமேகலையே முதன் முதல் ‘சைவம்’ எனும் சொல்லைக்கூறியது. மணிமேகலை பல சமய நெறிகளைப் பின்பற்றியவர்களோடு தருக்கம் புரிந்து வெல்கிறாள். அவர்களில் சைவ வாதியும் இடம் பெறுகிறார். “பரசுநின் தெய்வம் எப்படி என்ன” என்ற மணிமேகலையின் கேள்விக்கு,

“இருசுடரோடு இயமானன்ஐம் பூதமென்ற

எட்டுவகையும் உயிரும் யாக்கையுமாய்க்

கட்டிநிற் போனும் கலையுருவினோனும்

படைத்து விளையாடும் பன்பினோனும்

துடைத்துத்து யர்தீர்தோற்றத் தோனும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

தன்னில் வேறு தானொன்றிலோனும்

அன்னோன் இறைவன் ஆகும்….” (மணிமேகலை: 89 – 95)

என்று சைவவாதி கூறுகின்றான். இருசுடர், இயமானன், ஐம்பூதம் என்பவற்றினை இணைத்து நிற்பவனாக சிவனைக் காட்டும் நிலைவேத கால உபநிடதபிரம்ம சிந்தனையின் தொடர்ச்சி எனலாம். கலையுருவினனாகவும் படைத்தல், துடைத்தல் முதலிய செயல்கள் புரிபவனாகவும் அவனைக்காணும் நிலைபுராணச் செய்திகள் மூலம் விரிவு பெற்ற நிலை எனலாம். இவ்வாறு வேதமரபு, புராணமரபு என்பவற்றின் இணைப்பாக மணிமேகலையூடாக உணரப்படும் சைவ சிந்தனையே தமிழ் இலக்கியப் பரப்பில் முதன் முதலாக எமக்குக்கிடைக்கும் சைவ மெய்யியற்காட்சியாகும்.

பக்தி இயக்ககாலம்

பழந்தமிழ் நூல்களைத் தொடர்ந்து வந்த பல்லவர்காலபக்தி இயக்கமே சைவத்திற்குப்புத் தெழுச்சியும், மெய்யியற் செழுமையும் நல்கியது. தோத்திரங்களினூடு சைவத்தைப்பரப்பியது. இக்காலகட்டத்தில் வெளியான திருமந்திரமே தமிழில் ‘சைவ சித்தாந்தம்’ எனும் சொல்லை முதன் முதற்கூறியது. திருமந்திரத்தின் தோற்றக்காலம் தொடர்பில் அறிஞர்களிடையே வெவ்வேறான முரண்பட்டகருத்துக்கள் நிலவு கின்றன. சுந்தரர்தேவாரத்தில் (கி.பி 9) திருமூலர் பற்றிய குறிப்புக்காணப்படுவதும் சம்பந்தர், நாவுக்கரசர்தே வாரங்களில் (கி.பி 6,7) குறிப்பெதுவும் காணப்படாமையும் கொண்டு கி.பி 7ஆம் நூற்றாண்டே திருமூலரின் காலம் எனும் முடிவுக்கு நாம்வரலாம் (ஞானகுமாரன்,நா., 2012:12-13).

சைவசமயம் மக்கள் வாழ்வுடனும், கோயிலுடனும் நெருங்கிய உறவு கொள்ளத் தொடங்கிய பக்தி இயக்ககாலச் சூழலில் தமிழ்நாட்டில் ஆகமக்கல்விபரவியது. திருமுறைகளில் பரவலாகக் காணப்படும் ஆகமங்கள் பற்றிய செய்திகள் இதனை உறுதி செய்கின்றன. திருமந்திரம் ஆகமாந்த உண்மைகளை எடுத்துக்கூறும் நூலாகவே கொள்ளப்படுகின்றது. இதில் ‘சைவசித்தாந்தர்’ ,‘சைவசித்தாந்தம்’ என்ற வாறான குறிப்புகள் உள்ளன.

“சொற்பதமே வித்துரி சற்றுமேலான

நற்பதம் கண்டுளோர் சைவசித்தாந்தரே” (திருமந்திரம்: 1421)

“சித்தாந்தத்தே சீவன் முத்திசித்தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித்தித்தவர்

சித்தாந்த வேதாந்தஞ்செம் பொருளாதலாற்

சித்தாந்த வேதாந்தங்காட்டும் சிவனையே” (திருமந்திரம்: 2355)

என்பனவாக அந்நூல் குறிப்பிடும். சைவசித்தாந்தத்தின் அடிப்படைகளை விளக்கும் வகையிலான பாடல்கள் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்

பதியினை போற்பசுபாசம் அனாதி

பதியினைச் சென்றணுகாப்பசுபாசம்

பதியணுகிற்பசு பாசநிலாவே." (திருமந்திரம்: 115)

இத்தகுபாடல்கள் சைவசித்தாந்தம் சார்பான பொருளுண்மைகளை உணர்த்தினாலும் அந்நூல் அம்மெய்யியலுக்குப்புறம்பான பல்வேறு செய்திகளையும் உள்ளடக்கியது. சுருங்கக்கூறின் அந்நூல் சமகால சைவத்தின் பல்வேறு முகங்களையும் காட்டிய ஒருகாலக்கண்ணாடியாகும். அதில் அக்காலப்பகுதியில் அரும்பத் தொடங்கியிருந்த சைவசித்தாந்தசார்பான எண்ணக்கருக்களையும் அவதானிக்க முடிகிறது.

தமிழ்நாட்டின் சமயவரலாற்றில் கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை பக்தி நெறியேபிரதான பண்பாகக்காணப்பட்டது. இதுகி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து தீவிரமடைந்தது. பௌத்த, சமணசமயங்களே சைவ பக்தி நெறிக்கு பிரதானசவாலாக இருந்தன. சைவநாயன் மார்கள் இம்மதங்களிற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் சித்தாந்த மெய்யியலை உருவாக்கும் முயற்சிகளில் அவர்கள் பெரிதும் ஈடுபடவில்லையெனினும் பக்திநெறியுடன் இணைந்துசைவசித்தாந்த சிந்தனை தமிழர்பண்பாடெங்கும் பரவிடக்காணலாம் . குறிப்பாக சைவசித்தாந்த சிந்தனையானது ஆகமத்துடனும், கோயில்வழிபாட்டுடனும் மிகநெருங்கிய தொடர்புடன் இருந்துள்ளமையினை பல்லவர்கால பக்தி இலக்கியச்சூழல் வெகுவாகக் காட்டியுள்ளது. அதாவது சைவநாயன்மார்கள் சைவசித்தாந்தம் கூறும் சைவசமயவாழ்வியலை தங்கள் வாழ்வியலுடன் இணைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளமையானது கவனத்திற்குரியது.

சைவசித்தாந்தம் பேசும் முப்பொருட்களானபதி, பசு, பாசம் ஆகியன பக்திநெறிக்காலத்தில் நாயன்மார்களின் வாழ்வியல் வெளிப்பாட்டில் இடம் பெற்றிருக்கக்காணலாம். குறிப்பாக, பதிகம் பாடிய நாயன்மார்களின் அனுபவங்களில் பதியாகிய இறைவனை பசுவாகியதங்கள் ஆன் மாக்கள் சென்றடைய பல்வேறு பாசம் எனும் தளைகளால் சூழப்பட்ட வாழ்விலிருந்து விடுபடும் வகையில் அமையப்பெற்றுள்ளமையினை கவனத்தில் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, மாணிக்கவாசகர் 'சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட' என்று அச்சோதிப்பதிகத்தில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வாறே ஏனையநாயன் மார்களின் பக்திப்பாடல்களிலும் இவ்வனுபவங்கள் நிறையவே வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்தி இலக்கியப் பதிவுகளுக்கு அப்பால் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் காஞ்சிபுரக்கல் வெட்டொன்றில் 'சைவசித்தாந்தத்தைப் பின்பற்று கின்றவன்' என்று குறிப்பிட்டுள்ளமையானது சோழர்காலத்திற்கு முன்னையகால தமிழர் வாழ்வியலில் சைவசித்தாந்த சிந்தனையின் நெருக்கத்தினை வெளிப்படுத்துகின்றது. இரண்டாம் நரசிம்மன் எனப்பட்ட இராஜசிம்மன்காலம் ஆகமமரபும், சைவசித்தாந்தமும் பேணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவனது சமய உணர்வானது இவன்காலக்கல் வெட்டுக்களில் பின்வருமாறு பிரதிபலிக்கின்றது.

"ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்" **(South Indian Inscription, Vol. I, No.25)**

"சைவசித்தாந்த வழியைப்பின் பற்றுபவன்" **(Ibid, No. 24)**

சோழப்பேரரசர்காலம்

பக்தி மார்க்கத்தின் பெறு பேறான திருமுறைகள் சோழராட்சியின் பிற்கூற்றில் சைவசித்தாந்த மெய்யியலைத் தோற்று வித்தது. தேவாரச்சிந்தனைகள் மெய்யியலாகப் பரிணமிக்கும் நிலைமாற்றத்தை மெய்கண்டசாஸ்திரத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள முதல் இருநூல்களான திருவுந்தியாரிலும், திருக்களிற்றுப் படியாரிலும் கண்டு கொள்ளலாம். அறிவதற்கு அரியவனான சிவனை உருவத்திரு மேனி மூலம் கண்டு கொள்வது இலகுவான தென்றும், உள்ளம் உருகி வேண்டுவதால் அன்றி பிறவழிகளால் அவரை அறிய முடியாதென்றும், நடனபாணியான சிவனை அவனது சிலம்பின் ஓசை ஒலிவழிவணங்கு என்றும், அறிவால் ஆராயாது உணர்ந்து கொள்ள வேண்டு மென்றும், எமது உணர்விலும், அறிவிலும் சேருபவராகிய சிவன் வாழ்க வென்று கூறிச்செல்லும் திருவுந்தியார் பக்திமார்க்கத்தின் தொடர்ச்சியைப் பேணுவதாகவே காணப்படுகிறது.

தோத்திரங்களுக்கும், சாத்திரங்களுக்கும் இடைப்பட்ட இக்காலத்தில் 'ஞானாமிர்தம்' எனும் நூலின் தோற்றத் தினையும் பார்க்க முடிகின்றது. தமிழில் எழுந்த இந்நூலினை 'வாகீச முனிவர்' என்பவர் எழுதியுள்ளார். இதுவே சைவசித்தாந்தத்தை மெய்யியல் முறைமைக்குட் படுத்திக்கூற விழைந்த முதற்றமிழ்நூலாகும். ஆயினும்இதன்பின்வந்த 'சிவஞான போதமே' தமிழில் சைவசித்தாந்த முதன்நூலாகக் கருதப்படுகிறது. இது பன்னிரு சூத்திரங்களுள் சித்தாந்த முழுமையையும் எடுத்துரைக்கின்றது. இந்நூலின் ஆசிரியர் 'மெய்கண்டார்' ஆவார். மேற்படி சிவஞானபோதம் என்ற நூலானதுரௌரவாகமத்தின் எழுபத்து மூன்றாம் படலமாகியபா பவிமோசனப் படலத்தின் பன்னிரு அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டது என்ற கருத்து உளது. (ஞாெயியனயளரனெயசயஅஇளு.இ 1951:02) இது சிவாகம மரபுக்கும், தமிழ் சைவசித்தாந்த நெறிக்குமான தொடர்பை உணர்த்தி நிற்பது. எனினும் இக்கருத்து ஆய்வாளர்சிலரால் மறுக்கப்பட்டு அது 'தமிழ் முதல் நூலே' என்றவகையிலான ஆய்வு முடிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

மெய்கண்டாரின் மாணாக்கரான அருணந்தி சிவாசாரியாரினால் “சிவஞான சித்தியார், இருபா இருபஃது” என்பனவும் மற்றொரு மாணவரான திருவதிகைமனவாச கங்கடந்தாரால் ‘உண்மை விளக்கமும்’ எழுதப்பட்டன. இவர்கள் வழிவந்த உமாபதி சிவாச்சாரியார் ‘சித்தாந்த அட்டகம்’ எனப்படும் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் நூல்களை எழுதினார். மெய்கண்டார் இ அருணந்திசிவாச்சாரியார், உமாபதிசிவாச்சாரியார், மனவாசகங்கடந்தார், திருவியலூர் உய்யவந்ததேவர், திருக்கடவூர் உய்யவந்ததேவர் என்போர் எழுதிய பதினான்குநூல்களும் “சைவசித்தாந்த சாஸ்திரங்கள்” எனப்படுகின்றன. இவைகி.பி 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் சைவசிந்தனையை சித்தாந்தமாக, ஒரு மெய்யியல் முறைமையோடு தமிழில் நிறுவியவகையில் முதன்மையுறுகின்றன. இவற்றுள் சிவஞான போதம் முதன் நூலாகவும், சிவஞான சித்தியார்வகை நூலாகவும், சிவப்பிரகாசம் விரி நூலாகவும் அமைந்துள்ளன.

தமிழர்பண்பாட்டு மரபில் சைவசித்தாந்தம் சோழர்காலத்தில் ஒரு மெய்யியல் முறைமையாக வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழர் பண்பாட்டியல் வாழ்வில் சோழர்கள்சமயம், தத்துவம், கலை, ஆத்மிகம், அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு எனும் அனைத்திலும் மிகவும் உன்னத நிலையினைப் பெற்றிருந்துள்ளமையினை ஆய்வாளர்கள் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். குறிப்பாகப் பேராசிரியர்கைலாச பதி அவர்களின் ‘பேரரசும் பெருந்தத்துவமும்’ (பண்டைத் தமிழர் வாழ்வும்வழிபாடும்) என்ற கட்டுரைமிகத் தெளிவாகவே சோழர்கால தமிழர்பண்பாட்டு வாழ்வியலில் சைவசித்தாந்த கொள்கையின் சிறப்பினை எடுத்தக்காட்டுகின்றது. தத்துவம் தனியே சமயத்துடன் மட்டும் இணைந்த ஒன்றல்ல மக்களின் வாழ்வின் ஏனைய கூறுகளான ஒழுக்கம், அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்துடனும் இணைந்தது.

தமிழருடைய பண்பாட்டில் நிலவிய சிந்தனையானது ஒரு சிறந்த தத்துவமரபாக எழுச்சி பெற்றது என்பதற்கு மூன்று பிரதான காரணிகளைடுனுவில் என்பவர் குறிப்பிடுகின்றார். அதாவது சோழர்காலத்தின் அரசியல் செல்வாக்கு, தனிப்பட்ட முக்கியத்துவம், இறையியல் தொடர்பான கற்றல் போன்றன இல்லா விட்டால் சைவசித்தாந்த தத்துவமரபானது உலகளாவிய சிறப்பினை அடைந் திருக்காது என்று குறிப்பிடுகின்றார் ( னுரரெறடையஇசு.இ 1985:62-63).

தமிழர் பண்பாட்டு மரபில் குறிப்பாக, சமய – தத்துவமரபில் பக்திமரபும் – பேரரசுகாலத்தில் எழுந்த தத்துவமரபும் தொடர்ச்சியுறவுடைய வகையில் காணப்படுகின்றன. சமயத்தினை வளர்க்க சமயவாதிகளான நாயன்மார்கள் தத்துவார்த்த சிந்தனையை உள்வாங்கிபக்தி நெறி நின்றுவளர்த்தனர். ஆனால் பேரரசு நிலவியகாலத்தில் சமயத்தினை தத்துவ நிலை நின்று வளர்ப்பதற்கு சாத்திர நெறி நின்றுதத்துவ வாதிகளான சந்தான ஆசாரியார்கள்வளர்த்தனர்.

பேரரசு நிலவியகாலச் சூழ்நிலையிலிருந்து மாறுபட்ட தொருசமயச் சூழ்நிலையுடையதாகவே அதற்குப் பின்னைய காலப்பகுதிகள் அமைந்திருந்தது. தத்துவசிந்தனை குருகுலமரபின் இறுதி குருமுதல்வரான உமாபதி சிவத்துக்குப் பின்னர் வந்த பரம்பரையினர் சைவசித்தாந்த சிந்தனையினை பேணுதற் பொருட்டுமடங்களையும், ஆதீனங்களையும் நிறுவிச் செயல்பட்டுள்ளனர். அந்த வகையில் பேரரசுகாலத்தில் நிலை பெற்ற சைவசித்தாந்த சிந்தனையானது அதன் பிற்பட்ட காலத்தில் தோன்றிய பிரபந்தவகை இலக்கியங்களிலும், கோயில் வழிபாடுகளிலும் மற்றும் தனிமனித வாழ்வியல்களிலும் வெளிப்பட்டு நிற்கக்காணலாம்.

சைவ ஆதீனங்களும் சைவசித்தாந்த வளர்ச்சியும்

பேரரசுக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய திருவாவடுதுறை ஆதீனம் போன்ற ஏனைய ஆதீனங்கள் இன்றும் குருசீடபரம் பரை வழியாக சைவசித்தாந்த சிந்தனைகளைப் பேணிவருவதுடன், சைவ சித்தாந்த வாழ்வு முறைகளில் பரவலடையச் செய்து வருகின்றன. எடுத்துக்காட்டாக திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் போன்றவை தமிழ்நாட்டில் பலகோயில்களில் ஆகமமரபு சார்ந்த சைவசித்தாந்த சிந்தனையுடன் இணைந்த வழிபாடுகள் தடையுறாவண்ணம் நிகழ்வதற்கு ஒழுங்குகள் செய்துவருகின்றமையானது இன்றும் சைவசித்தாந்த சிந்தனை மரபானது தமிழர் பண்பாட்டியல் வாழ்வில் உயிர்ப்புடன் இயங்கிவருகின்றமையினைக் காட்டுகின்றது.

இவ்வாதீனங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு கிராமப்புறங்களுக்கும் சைவசித்தாந்தத்தை நிறுவன நிலையில் இட்டுச்சென்றன. அதன் மெய்யியலைப் பேணுதல், விளக்குதல், அதன்சார்பான சமயநடை முறைகளைச் செயற்படுத்தல் என்பவற்றில் ஆதீனமரபுதீவிரகவனம் செலுத்தியது. இந்த அடிப்படையில் சித்தாந்த விளக்கநூல்களும், உரை நூல்களும் எழுதப்பட்டன. பண்டாரசாத்திரங்கள், கட்டளைகள் என்னும் பெயர்களிலமைந்த நூலாக்கங்களும், சிவஞான முனிவர் முதலியோரால் இயற்றப் பெற்ற உரைகளும்இவ்வகையிற் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையன.

மேற்குறித்தவாறு ஆதீனங்களின் செயற்பாட்டில் சித்தாந்தம் வளர்ந்து வந்த காலப்பகுதியில் இலக்கிய ஆக்கங்களின் உள்ளீடாகவும் அதுவாழ்வு பெற்று வந்தது. பெருந்தொகையான சைவ நூல்களில் இதனை அவதானிக்கலாம். குறிப்பாக இரு நூல்களை இங்குசுட்டலாம். ஒன்றுகச்சியப் பசிவாசாரியார் இயற்றிய 'கந்த புராணம்;;' மற்றது கடவுண்மா முனிவரின் 'திருவாதவூரடிகள்புராணம்' . இவைஏறத்தாழ 13-15 ஆம் நூற்றாண்டுகளுக் கிடைப்பட்ட காலப் பகுதியில் எழுந்தவை. வடமொழிஸ் கந்தமஹாபுராணத்தின் ஒரு பகுதியைத் தமிழில் புராணகாப்பியவடிவில் தந்த மைந்தகந்த புராணம் சைவ சித்தாந்தத்தின் உருவமாக அமைந்த சிறப்புடையது. மாணிக்கவாசகரின் வரலாற்றைக் கூறுவதான திருவாதவூரடிகள் புராணம் சைவசித்தாந்த அடிப்படையைத்தழுவி, 'சத்திநிபாதம்' எய்தும் தகுதிப்பாடமைந்த ஒருவரின்

ஞானவரலாறாக அதனை அமைத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்க ஒருசிறப்பம் சமாகும். இவ்வாறான நூல்களில் சைவசித்தாந்தப் பயில் நிலை தனிநிலையில் ஆராயத்தக்க பொருள் விரிவு கொண்டதாகும்.

## முடிவுரை

சைவசித்தாந்தச் சிந்தனையின் ஊற்றுக்களை வடமொழியில் எழுந்த வேதாகமங்களிலேயே முதலிற்காண்கின்றோம். எனினும், சைவசித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெற்று வளர்ச்சி பெற்றதன்மையினை சிறப்பாக தமிழ்மரபிலேயேகாண முடிகின்றது. பழந்தமிழ்நூல்கள், திருமுறைகள் ஆகியவற்றிலே சித்தாந்தச் சிந்தனைகள் இடம் பெற்று பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களில் அவைகோட் பாட்டுவடிவம் பெற்றுள்ளதுடன் அவற்றை வளர்க்கும் பணியில்மடங்களும் ஆதீனங்களும் முக்கிய பங்காற்றியமையினை இவ்வாய்வு வெளிக் கொணர்கிறது.

## துணைநூற்பட்டியல்

**[1] Piet, John,H., 1952, Saiva Siddnanta Philosophy, The Christian Literature Society for India, Medras.**

**[2] Sivapadasundaram,S., 1951, An Out line of Sivagnanapodam, Sivaprakasa Press, Jaffna.**

**[3] Dunuwila,R., 1985, Saiva Siddhanta Theology, Motital Banarsidass, Delhi.**

[4] குன்றக்குடிஅடிகளார், 1965, தமிழர்கண்டநெறி, குரும்பசிட்டிசன்மார்க்கசபை 30ஆம்ஆண்டுநிறைவுவிழாமலர், சன்மார்க்கசபை, குரும்பசிட்டி.

[5] ஞானகுமாரன்,நா., 2012, சைவசித்தாந்தத்தெளிவு, தூண்டி, யாழ்ப்பாணம்.

[6] கலைவாணி,இரா., 1992, வேதபாரம்பரியமும்சைவசித்தாந்தமும், ஸ்ரீரெங்காபிரிண்டர்ஸ், மதுரை.

[7] சித்தாந்தசாத்திரம்பதினான்குமூலமும்உரையும், 1934, சைவசித்தாந்தமகாசமாசம், திருவருளகம், சென்னை.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 